மாலை முரசு

பக்கங்கள் 17+9

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 10 திங்கட்கிழமை 26.08.2024 | அதிர்வு 25

## கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் போர்க்கப்பல்

இந்தியக் கடற்படையின் முன்னரங்கப் போர்க் கப்பலான ஐ.என்.எஸ். மும்பை மூன்று நாள்

04



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழ் மொழி உரிமை பாதுகாக்கப்படும்

# சகலருக்கும் சார்பாக புதிய அரசமைப்பு!



## தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு அநுர உரை

தமிழர்களின் மொழி உரிமையை அரச நிர்வாகத்தின் ஊடாக உறுதிப்படுத்துவதுடன் அரச நிர்வாகத்தில் தமிழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும் போது அவருக்கு தமிழ் மொழியில் பதிலளிப்பதைக் கட்டாயமாக்குவோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

04

# சுவிஸில் இருந்து வந்த குடும்பஸ்தர் இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை

### வவுனியா வடக்கில் கொடூரம்

(கே.வசந்தன்)

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள உறவினர் வீடொன்றில் சுவிஸ் நாட்டில் இருந்து விடுமுறையில் வருகை தந்த ஒருவர் தங்கியிருந்துள்ளார்.

04





Tamil One
FREE ENTRY
MEGA BLAST
BIGGEST SUMMER EVENT
2024
FREE PARKING
SV MEDIA
7 & 8
SEPT 2024
SCARBOROUGH FAIR GROUND
MORNINGSIDE & FINCH
Celebrating South Asian Taste and Culture
647-993-9291 • 437-872-6257 • 416-436-1010




# தமிழ்ப் பொது வேட்பாளரின் விஞ்ஞாபனம் விரைவில்!

## தென்னிலங்கையிலிருந்து அழைப்பு வருகின்றபோது ஒருமித்து முடிவு எடுக்கப் பொதுக் கட்டமைப்பு தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை ஒன்றுகூடி விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தை விரைவில் வெளியிடுவது, தென்னிலங்கையில் இருந்து வருகின்ற அழைப்புக்களை ஏற்பதா? இல்லையா? என்பதை ஒருமித்து முடிவெடுப்பது, வடக்கு - கிழக்கில் தேர்தல் பிரசாரங்களை முழு வீச்சில் முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இன்று எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானங்கள் அனைத்தையும் தேர்தல் காலம் முடியும் வரையில் அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட அதன் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தெதுரு ஓயாவில் காணாமல்போன தாயும் மகனும் சடங்களாக மீட்பு!

தெதுரு ஓயாவில் காணாமல்போன தாயும் மகனும் சடங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குருநாகல், போகமுவ பிரதேசத்தில் இருந்து தெதுரு ஓயாவில் நேற்று நீராடச் சென்ற தாய் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர்.

அவர்களில் 9 வயது ஆண் பிள்ளையின் சடலம் நேற்று நீரோடையில் இருந்து மீட்கப்பட்டது.

காணாமல்போன தாய் மற்றும் 2 வயது ஆண் பிள்ளையின் சடலங்கள் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழில் குடும்பப் பிரச்சினையால் மனைவியை அறைக்குள் வைத்துப் பூட்டி தீ வைத்த கணவன்

குடும்பப் பிரச்சினையால் மனைவியை அறைக்குள் வைத்து பூட்டி கணவன் தீ மூட்டியதில் மனைவி தீக் காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் நிருத்திகா (வயது 28) எனும் குடும்பப் பெண்ணே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவன்-மனைவிக்கிடையில்நீண்டகாலமாகப் பிரச்சினைகள் நிலவி வந்தன. நேற்றும் இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையில், கணவன், மனைவியை வீட்டின் அறைக்குள் இழுத்துச் சென்று தாக்கிய பின்னர், மனைவிக்குத் தீ வைத்து விட்டு அறைக் கதவைப் பூட்டி விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

அயலவர்கள் அந்தப் பெண்ணைக் காப்பாற்றி அச்சுவேலி வைத்திய சாலையில் சேர்த்திருந்தார்கள். அந்தப் பெண் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## யாழ். பிறவுண் வீதி விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் பலி



யாழ்ப்பாணத்தில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த ப.ஐங்கரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது மகனைத் தனியார் வகுப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்த வேளை, பிறவுண் வீதியில் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## மதுபோதையில் பொதுமகனைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் பணி நீக்கம்!

**(எஸ்.நிதர்ஷன்)**

மதுபோதையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொதுமகனைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஊர்காவற்றுறை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மது போதையில், குறிகட்டுவான் பகுதியில் கடமையில் இருந்திருந்தபோது வீதியால் சென்ற பொதுமகனிடம் இலஞ்சம் பெற முயன்றதோடு அவர் மீது தாக்குதலையும் மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்த நிலையில் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரைத் தலா ஒரு இலட்சம் பெறுமதியிலான இரண்டு ஆள்பிணைகளில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

இதேவேளை, அவர் பணியிடை நீக்கமும் செய்யப்பட்டுள்ளார்.



## வவுனியாவில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

வவுனியாவில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, போகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலனிகம கிராம வயல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 53 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சகலருக்கும் சமமான...

'வளமான நாடு – அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞா பனம் கட்சியின் தலைவரும் ஜனாதி பதி வேட்பாளருமான அநுரகுமார திஸா நாயக்கவால் இன்று திங்கட்கிழமை கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை மத தலை வர்களுக்கு அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய பின்னர் உரையாற்றுகை யிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்குப் பதிலாக மாற்று முறைமையைச் செயற்படுத்துவோம். அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசமைப்பை உருவாக்குவோம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டவாட்சி கோட்பாட்டை செயல் வடிவில் அமுல்படுத்துவோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக 2015 -2019 வரையான காலப்பகுதி யில் முன்னெடுத்த செயற்பாடுகளை முடிவுறுத்தி, அனைத்து இன மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் வகையி லான புதிய அரசமைப்பை உருவாக்கு வோம்.

தமிழர்களின் மொழி உரிமையை அரச நிர்வாகத்தின் ஊடாக உறுதிப் படுத்துவோம். அரச நிர்வாகத்தில் தமி ழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும்போது அவருக்குத் தமிழ் மொழி யில் பதிலளிப்பதைக் கட்டாயமாக்குவோம்.

அத்தியாவசிய உணவு பொருட்களை இறக்குமதி செய்து உண்ணும் நிலைமை மாற்றம் பெற வேண்டும். தேசிய உணவு உற்பத்தி மேம்பாட்டு திட்டத்தைக் கட்டம் கட்டமாகச் செயற்படுத்துவோம்.

பொருளாதார முன்னேற்றத்தின் பிரதி பலனை நியாயமான முறையில் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிப்போம். நடுத்தர மக்களை ஏழ்மையில் வைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது.

பாடசாலை கல்விக் கட்டமைப்பை மறுசீரமைப்போம். உணவு, கல்வி, சுகா தாரம் என்பவற்றுக்கான வற் வரியை நீக்கு வோம். நீர் மற்றும் மின்சாரக் கட்டணத் தையும் குறைப்போம்." – என்றார்.



## கொழும்புத் துறைமுகத்தில்...

விஜயமாக இன்று காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலுக்கு இலங்கைக் கடற் படையினரால் சம்பிரதாயபூர்வமான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட டில்லி ரகத்தைச் சேர்ந்த நாசகாரி கப்பல்களில் மூன்றாவது கப்பல் ஐ.என்.எஸ். மும்பை ஆகும்.

மஸ்கன் டொக் லிமிடெட் நிறுவனத் தால் தயாரிக்கப்பட்ட இந்தக் கப்ப லுக்கு மும்பை நகரின் பெயரை அடிப்ப டையாகக் கொண்டு பெயர் சூட்டப்பட்டது.

இந்தக் கப்பல் அதன் தரமுயர்த் தல் பணிகளின் பின்னர் 2023ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி விசா கபட்டினத்தில் உள்ள கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை பிரிவிடம் சேவையில் இணைக்கப்பட்டது.

கொழும்பில் ஐ.என்.எஸ். மும்பை தரித்து நிற்கும் காலத்தில் இரண்டு நாடுகளின் கடற்படையினரதும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளும் இலக்குடன் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் இந்தக் கப்பலுக்கு விஜயம் செய்து அனுபவப் பகிர்வு செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் கப்பலின் விஜயத்தின்போது மேற்கு கடற்படை பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் டபிள்யூ.டி.சி.யு. குமாரசிங்கவை கப்பலின் கட்டளை அதிகாரி மேற்கு கடற் படை பிராந்திய தலைமையகத்தில் சந் திக்கவுள்ளார்.

அத்துடன் விளையாட்டுக்கள், யோகா மற்றும் கரையோரத்தைச் சுத்தமாக்கும் பணிகள் போன்ற கூட்டுச் செயற்பாடு கள் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து குறித்த கப்பல் விஜயத தின்போது மேற்கொள்ளப்படவுள் ளது.

இந்தக் கப்பல் மாலுமிகள் ஓய் வெடுப்பதற்கான சந்தர்ப்பமும் இந்த விஜ யத்தின்போது கிடைக்கப் பெறுவதுடன் கொழும்பு நகரில் உள்ள பல்வேறு முக் கிய இடங்களுக்கும் அதேபோல் கொழும்பு மற்றும் காலியில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலங்களுக்கும் அவர்கள் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஐ.என்.எஸ். மும்பை 2024 எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவிஸில் இருந்து வந்த...

அந்த வீட்டில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த நபரும், அவரது உறவின ரும் இரவு மது விருந்தில் ஈடுபட்ட நிலை யில் இருவருக்கும் இடையில் முரண்பாடு கள் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறி யுள்ளது.

இதன்போது சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்தவரின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளார். செல்லத்துரை விமலநாதன் (வயது 66) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் கிடைத்த முறைப் பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற கனகராயக்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் 60 வயது குடும்பஸ்தர் ஒரு வரைக் கைது செய்துள்ளதுடன் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரணிலை ஆதரிக்கப் போகிறோம்!

## இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தெரிவிப்பு

(ஆ.ரமேஸ்)

ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பையா சதாசிவத்தின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி அதன் நிலைப்பட்டை உத்தியோக பூர்வமாக அறிவித்தது.



இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று சுப்பையா சதாசிவத்தின் தலைமையில் நுவரெலியாவில் உள்ள அவரின் கட்சி அலுவலகத்தில் நேற்று (25) ஞாயிறு பிற்பகல் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பையா சதாசிவம், ஜனாதிபதி வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமது நாடு பொருளாதார பின்னடைவை கண்டு வீழ்ந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரம் முன்வந்து சர்வதேச நாணய நிதியம் ஊடாக கடன் பெற்றேனும் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றினார்.

அந்த வகையில் வெளிநாட்டுத் தலைவர்களின் நன் மதிப்பும் நன்பக தன்மையும் கொண்ட தலைமைத்துவ அனுபவசாலி ரணில் விக்கிரமசிங்க.

கடந்த இரண்டு வருட காலத்தில் உலகின் பல நாடுகளில் கடன் உதவிகளை பெற்று இலங்கையில் அனைத்து மக்களும் துன்பம் இல்லாமல் ஓரளவு வாழக் கூடிய நிலையை இவர் உருவாக்கி இன்று மக்கள் மனதிலும் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

அதேநேரம் இன்று இந்த நாட்டு மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழும் இன்றைய நிலை தொடர வேண்டுமானால் மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற செய்யவேண்டியது மலையகம் உள்ளிட்ட நாட்டில் அனைத்து மக்களின் கடமையாகும்.

இப்போது நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பலர் ஜனாதிபதியாகப் வேண்டும் என்று முன் வந்துள்ளனர். ஆனால் அவர்களின் பின் பலங்களை பார்ப்போமானால் அவர்கள் சாத்தியப்பட்டவர்கள் அல்லர்.

அதேநேரம் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றக் கூடிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருவரே.

70 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மலையக தோட்டப்பகுதி மக்களின் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை அழிந்து இருளில் எம்மக்களை விட்டவர்கள் ஜே.வி.பினர்.

இவர்களின் கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்துவிடாத நமது சமூகம் ஜே.வி.பி. என வாய்த்திரந்த உடப்புசலாவை பிரதேச நபரை வாயில் சுட்ட சம்பவத்தையும் யாரும் மறக்கவில்லை.

எனவே இந்த ஜனாதிபதி தேர்தலில் எமது முன்னணியின் நிர்வாக சபை கூடி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற செய்ய வேண்டும் என ஒரு மனதாக முடிவெடுத்துள்ளது.

இந்த நிலையில் எந்தவோர் கோரிக்கையும், நிபந்தனைகளும் முன்வைக்காது ரணிலை ஆதரிக்க முன்வந்துள்ள நிலையில் அவரின் வெற்றியை உறுதி செய்த பின் எமது மலையக மக்களின் உரிமைகள் தொடர்பில் நாம் கோரிக்கைகளை முன் வைப்போம்.- என்றார்.

அதேநேரத்தில் எதிர்வரும் காலங்களில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து சிறு கட்சிகளையும் உள்ளடக்கி பாரிய ஒரே கட்சியாக கூட்டணி அமைத்து மலையக மக்களுடைய தீர்க்கப்படாத உரிமைகளை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்க வுளதாகவும் இதன்போது சுட்டிக் காட்டினார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் ஆணையத்தின் கூத்து

நாட்டு மக்களின் பிரதான அடிப்படை உரிமைகளில் ஒன்று வாக்குரிமை. ஜனநாயக நாட்டில் மிக முக்கியமான அடிப்படை அம்சம் அதுதான்.

மக்களின் அந்த வாக்குரிமையை பாதுகாக்கும் விடயத்தில் முத்தரப்புகள் முக்கியமானவை. ஒன்று - நிறைவேற்றதிகாரம். அடுத்தது - சுயாதீன தேர்தல் ஆணையம். மூன்றாவது - நீதித்துறை.

உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் நாட்டின் ஒரு லட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்களின் உரிமையை பறிப்பதற்கு நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதியும், தேர்தல் ஆணையமும் காரண கர்த்தாக்கள் என்ற உண்மையைத் தோலுரித்துக் காட்டி இருக்கின்றது உயர் நீதிமன்றம்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நீண்ட காலதாமதத்தின் பின்னரான உத்தரவு என்றாலும் கூட, உண்மை விளம்பப்பட்டிருக்கின்றது.

மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய தரப்புகள் என உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிய இரண்டில் ஒன்று நிறைவேற்றதிகாரம். அது தற்போதைய ஜனாதிபதியின் வசம் உள்ளது. அவர் மூன்றாம் தர அரசியல்வாதி. தமது அரசியல் சுய நலன்களுக்காக மக்களின் வாக்குரிமையைப் பந்தாடுகின்றார். அவர் அப்படித்தான் செய்கின்றார். செய்வார். அதற்கு ஜனாதிபதி பதவி என்ற கவசம் இப்போது அவருக்கு உள்ளது. அதனால் ஆட்டம் போடுகின்றார். அதை விட்டு இறங்கும் போது பழைய வினைகள் எல்லாவற்றுக்கும் சேர்த்து அவர் விலை கொடுக்க வேண்டி இருக்கும். இப்போது போடும் ஆட்டங்களுக்கு உரிய விளைவுகளை அவர் அப்போது எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

அடுத்த தரப்பு சுயாதீன தேர்தல் ஆணையம். மக்களின் வாக்குரிமையை பேணிப் பாதுகாப்பதற்கு என்றே உருவாக்கப்பட்ட அமைப்பு அந்த உரிமையைப் பந்தாடிய இழிநிலையை உயர்நீதிமன்றம் அம்பலப்படுத்தி நிற்கின்றது.

அந்தப் பெருந்தவறை இழைத்தது முந்திய தேர்தல் ஆணையம் என்று கூறி இப்போதைய தேர்தல் ஆணையாளர்கள் தப்பிவிடலாம். ஆனாலும் இப்போது அவர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்டு விரல்கள் நீளுவதை ஆணையம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணையம் தான் அரசியல் செய்வதை விடுத்து, தேர்தல் முறையாகவும், சுயாதீனமாகவும், நீதி நெறிமுறையின்படியும், பக்கச்சார்பின்றியும் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தல் நீதி, நியாயமாக நடத்தப்படுவது மட்டுமன்றி, நடத்தப்படுவதாக மக்களுக்குக் காட்டப்படவும் வேண்டும். மக்களுக்கு அந்த நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் தேர்தல் ஆணையம் செயற்பட வேண்டும். நடந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் விதிமுறை மீறல்கள் தினமும் எண்ணிக்கை ரீதியில் அதிகரித்து வருவது பற்றிய புள்ளி விவரங்களை தினசரி வெளியிடுவதும், அதனை ஊடகங்கள் முக்கியம் கொடுத்து பிரசுரிப்பதும் ஒரு 'பாஷனாகி' வருகிறது.

அத்தகைய மீறல்கள், முறையீடுகள் தொடர்பில் தேர்தல் ஆணையம் எத்தகைய நடவடிக்கை எடுத்தது, என்ன நீதி செய்தது என்ற விவரம் வெளியாவதில்லை.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரித் துண்டு பிரசுரம் விநியோகித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை அதை பெரும் குற்றம்போல காட்டிப் பொலிஸார் நேரடியாகத் தலையிட்டு, அச்சுறுத்தி, தடுத்திருக்கின்றனர். இது தொடர்பில் தேர்தல் ஆணையத்திடம் முறையிடப்பட்டிருக்கின்றது. தேர்தலை பரிஷ்கரிக்கக் கோருவது கூட மக்களின் ஜனநாயக உரிமைதான். அதற்கு எதிராகப் பொலிஸார் பலாத்காரமாக நடந்து கொள்வது, அச்சுறுத்துவது போன்றவை ஜனநாயக உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் போன்றவற்றில் அத்துமீறித் தலையிடும் அடாவடித்தனமாகும்.

இது பற்றிய முதல் முறையீட்டிலேயே தேர்தல் ஆணையம் தலையிட்டு தனது முடிவையும் நடவடிக்கையையும் பகிரங்கப்படுத்துமானால் இத்தகைய பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படும். இந்தப் பிரச்சினை மீளவும் எழாது.

ஆனால் அத்தகைய விடயங்களை கவனிக்காமல், கருத்துக்கணிப்புகள் குறித்து விமர்சனங்களை முன்வைத்து, தான் ஓர் அரசியல் செய்து, தெருக்கூத்து ஆடிக் கொண்டிருக்கின்றது தேர்தல் ஆணையம்.





# தென். கிழக்கு பல்கலை. சம்மாந்துறை விடுதியில் கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பில் ஆராய்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாக மாணவர் விடுதியின் கழிவு நீர் முகாமைத்துவ கட்டமைப்பில் இடையூறு காணப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீனுக்கு கிடைத்த முறைப்பாடு தொடர்பாக ஆராயுமுகமாக சம்மாந்துறை வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் கள எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையிலான குழுவினர் அங்கு விஜயம் செய்தனர்.

தென்கிழக்கு பல்கலைகழக சம்மாந்துறை வளாக உதவி பதிவாளர்,வேலைத்தள பிரதானி, விடுதி பொறுப்பாளர், பொது சுகாதார பரிசோதகர்கள் இதன் போது கலந்து கொண்டு நிலமையை ஆராய்ந்தனர்.





# துருக்கித் தூதருடன் சந்திப்பு!

(எம். எப். றிபாஸ்)

இலங்கைக்கான துருக்கி நாட்டு புதிய தூதராகக் கடமையேற்றுள்ள தூதருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல் வருமான சிராஸ் மீராசாஹிபுக்குமிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள துருக்கி தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்ததிப்பின் போது இரு நாடுகளுக்கிடையிலுள்ள சிநேகபூர்வ உறவுகள் பற்றியும் கல்வி, கலை, கலாச்சாரம் போன்ற விடயங்களும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் தூதரிடம் முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாஹீப் எடுத்துக் கூறிய போது, அதனை முடியுமானவரை செய்து தருவதாகவும் தூதர் வாக்குறுதி அளித்தார்.

முன்னாள் முதல்வரின் இனைப்புச் செயலாளர் ஏ. எல். எம்.இன்சாட்டும் பங்கேற்றியிருந்தார்.






## புத்தளம் ஜெயா பார்ம் வெற்றிக்கிண்ணம்:

# அரை இறுதிக்கு முன்னேறினர் புத்தளம் லிவர்பூல் அணியினர்

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் உதைபந்தாட்ட லீக் புத்தளத்தில் தொடராக நடத்தி வரும் உதைப்பந்தாட்ட தொடரான ஜெயா பார்ம் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்ட தொடருக்கான கால் இறுதி ஆட்டம் ஒன்றில் புத்தளம் லிவர்பூல் அணி வெற்றி பெற்று அரை இறுதி போட்டிக்கு முன்னேறியது.

போட்டி நிறைவில் வெற்றியை தீர்மானிப்பதற்காக இடம்பெற்ற பெனால்டி உதையில் லிவர்பூல் அணியின் இளம் கோல் காப்பாளர் 19 வயது நிரம்பிய என். முஹம்மது ஷராப், 100 வீதம் கோலாக செலுத்தப்பட்ட பவர் புல் இரு உதைகளை லாவகமாக தடுத்ததன் விளைவாக லிவர்பூல் அணிக்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது.

ஜெயா பார்ம் நிறுவனத்தின் புத்தளம் பிராந்திய நிறைவேற்று பணிப்பாளரும், புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான பர்வீன் ராஜா இத்தொடருக்கு பூரண அனுசரணை வழங்கி வருகிறார்.

இந்த பரபரப்பான கால் இறுதி ஆட்டம் சனிக்கிழமை (24) மாலை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

புத்தளம் லிவர்பூல் அணியும், கற்பிட்டி பேர்ள்ஸ் அணியும் இந்த கால் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பம் முதல் மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா 03 கோல்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர முடிவில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

லிவர்பூல் அணிக்காக எம்.எம்.முஸக்கிர் இரு கோல் களையும், எம்.என்.எம்.ஆஷிக் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

பேர்ள்ஸ் அணிக்காக எம்.எச்.றிஜ்வான் ஒரு கோலையும், எம்.எப்.எம். அஹாதிர் 02 கோல்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றியை தீர்மாணிப்பதற்காக இடம் பெற்ற பெனால்டி உதையில் லிவர்பூல் அணி 03 : 01 கோலினால் வெற்றி பெற்று அரை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

போட்டிக்கு நடுவர்களாக எம்.ஏ.எம். பஸ்ரின், எஸ்.எம்.ஜிப்ரி, ஏ.ஓ.அஸாம், ஏ.ஏ.கியாஸ் ஆகியோரும், போட்டி ஆணையாளராக புத்தளம் உதைபந்தாட்ட லீக்கின் நிறைவேற்று குழு உறுப்பினரும், சுற்றுப்போட்டி களின் இணைப்பாளருமான எம்.ஜெனூசனும் கடமையாற்றினர்.

லிவர்பூல் கழக முகாமையாளர் எச்.எச்.ஹம்ருசைன் அணியை வழி நடத்தி இருந்ததோடு வீரர்களுக்கான பயிற்சியை லிவர்பூல் கழக முன்னாள் வீரர்களும், கால்பந்தாட்ட லீக்கின் மத்தியஸ்த்தர் சங்க உறுப்பினர்களுமான எம்.ஐ.எம்.அலி மற்றும் எம்.ஓ.ஜாக்கிர் ஆகியோர் வழங்கி இருந்தனர்.

பெனால்டி உதையில் லிவர்பூல் அணியை வெல்ல வைத்த இளம் கோல் காப்பாளர் ஷராபை லிவர்பூல் ஆதரவாளர்கள் தோலில் சுமந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.







# தேசிய ஐக்கிய முன்னணி தேர்தல் பிரச்சார கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொல்ஹகவெல நகரில் புதிய மறுமலர்ச்சிப் பாதைக்கு நாட்டை இட்டுச் செல்கின்ற தேசிய ஐக்கிய முன்ன ணியின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார கூட்டம் இன்று இடம் பெற்றது.

இதன் போது தேசிய ஐக்கிய முன்ன ணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார தி நாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.





# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி





(எம்.எப்.நவாஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக கலை கலாச்சார பீடத்தின் ஆங்கில கற்கைகள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த ஆங்கில ஆசிரியர்களுக் கான பயிற்சிப் பட்டறை வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல் முனை, சம்மாந்துறை மற்றும் அக் கரைப்பற்று கல்வி வலயங்களில் ஆங் கில ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை இதன் இணைப்பாளர் பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். நவாஸ் தலை மையில் திணைக்களத்தின் கேட் போர்கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வை ஆங்கில கற்கைகள் திணைக்களத்தின் தலைவி கலாநிதி எம்.ஐ. பௌசுள் கரீமா ஆரம்பித்து வைத்தார்.

பயிற்சி பட்டறையின் முதல் சுற்றில் பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். நவாஸ் கருத்துக்களை முன்வைத்தத்துடன் பங்குபற்றுனர்களுடனான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. இரண்டாம் சுற்றில் பேராசிரியர் சஹீட் அப்ராருள் ஹசனின் தலைமையில் உரையாடலும் கருத்துப் பரிமாற்றங் களும் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மற்றும் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியனர். பங்குபற்றியோருக் குச் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட விரிவுரை யாளர் எம்.ஏ.எம். சமீம் மற்றும் விரிவுரை யாளர் இசட். ஹுருல் பிர்தொளஸ் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.





# சேவைநலன் பாராட்டு விழா!

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் 24 வருடங்கள் கடமையாற்றிய டாக்டர் உவைசுல் பாரி தனது 31 வருட கால அரச சேவையில் – சுகா தாரப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவருடைய சேவையைப் பாராட்டி மருதமுனை பிரதேச வைத்தியசாலையால் சேவை நலன் பாராட்டும், பிரியா விடை நிகழ்வு அண்மையில் வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் இடம்பெற்றன.

மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் பல வருடங்கள் கடமையாற்றி அந்தப் பிரதேச மக்களுக்கு அளப்பெரும் சேவையாற்றியமைக்காகவும், வைத்தியசாலையின் அபிவிருத்திக்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காகவும் டாக்டர் உவைசுல் பாரி இந்த நிகழ்வின் போது அதிதிகள்,



வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் அபிவிருத்தி குழுவினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர் கௌரவ அதிதியாகவும், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் உப தலைவரும் பேராசிரியருமான, எஸ்.எம்.ஜுனைடீன், செயலாளர் பி.எம்.யாசிர் அறபாத், சரோ பாம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எச்.தாஜுடீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

வைத்தியர்களான ஏ.எம்.எம்.அஸ்ஹர் மற்றும் ஏ.புஸைறா, வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மற்றும் அபிவிருத்தி குழுவினர், டாக்டர் உவைசுல் பாரியின் குடும்பத்தினர் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.






# வங்காலையில் பாடசாலை அதிபரை மாற்றக்கோரி பெற்றோர் கவனயீர்ப்பு!

( வாஸ் கூஞ்ஞ, மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட் )

மன்னார் வங்காலை புனித ஆனாள் கல்லூரி தேசியப் பாடசாலையின் அதிபரை உடனடியாக மாற்றக் கோரி இன்று திங்கட்கிழமை (26) காலை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலைக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பிள்ளைகளின் கல்வியை பாழாக்காதே, ஒழுக்கம் இல்லாத உன்னால் எப்படி ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க முடியும்?, ஒரு குடும்பத்துக்காக ஊரை அழிப்பதா?, உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் வங்காலை புனித ஆனாள் கல்லூரி தேசியப் பாடசாலை கடந்த பல வருடங்களாக கல்வியிலும், விளையாட்டு நிகழ்வுகளிலும்,ஏனைய போட்டிகளிலும் சாதனை நிலை நாட்டி வந்த நிலையில் அண்மைக் காலங்களாகப் பாடசாலை சகல துறைகளிலும் கீழ் மட்டத்தை அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகக் குறித்த பாடசாலையின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டதோடு, மாணவர்களின் சகல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத் திறன் அற்றவராக உள்ள நிலையில் உடனடியாக அவரை மாற்றிப் புதிய அதிபரை நியமிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை குறித்த அதிபரை மாற்ற எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர் என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கை களை மேற்கொள்வதாக தெரிவித்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது.




# மட்டக்களப்பில் இளைஞர் உரையாடல் ஆர்வத்துடன் பங்கேற்ற இளைஞர்கள்!

(பழுவூரான்)

இளைஞர்களிடையே வாக்காளர் விழிப்புணர்வை மேம்படுத்தலும், ஜனநாயகத்தை வளர்த்தலும் எனும் தொனிப்பொருளில் சி.ஐ.ஐ. (Coalition for Inclusive Impact) நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை (25) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

சி.ஐ.ஐ. நிறுவனத்தின் பிரதிநிதி சட்டத்தரணி கார்த்திகா ஆதித்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அலிசாஹிர் மௌலானா, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் சார்பாக அவரின் இணைப்பாளர் தேவஅதிரன் மற்றும் பேராசிரியர் சந்திரா மகேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அரகலயின் பின்னரான தற்போதைய அரசியல் சூழ்நிலையில் வாக்காளர்களுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் குறைந்து வரும் சமூக ஒப்பந்தத்தை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர்களிடையே வாக்காளர் விழிப்புணர்வை மேம்படுத்தல், தேர்தல் முறைமையில் குறைவான பிரதிநிதித்துவக் குழுக்களைச் சேர்ப்பதை வலுப்படுத்தல், தேர்தல் சீர்திருத்தங்கள் மற்றும் கொள்ளைத் தெரிவுகள் பற்றிய புரிதலை அதிகரித்தல், ஒதுக்கப்பட்ட சமூகங்களின் கரிசனங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அரசியல் அறிக்கைகளைத் தயாரிக்க ஊக்குவித்தல், மேலும் தகவலறிந்த மற்றும் உள்ளடக்கிய ஜனநாயகத்தை வளர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் சி.ஐ.ஐ.நிறுவனம் சார்பாக சர்வ கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டு தங்களின் கருத்துகளைப் பரிமாறினர். மக்கள் பிரதிநிதிகளிடம் பலவாறான கேள்விகளையும் முன் வைத்திருந்தனர்.




# கப்பலடி பாடசாலையில் பணி நலன் பாராட்டு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கப்பலடி அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி இடமாற்றம் பெற்று சென்ற அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாகப் பணி நலன் பாராட்டு விழா வியாழக்கிழமை (22) பாடசாலையின் அதிபர் எம் ஜீ.எம் சறூக் தலைமையில் இடம்பெற்றது.

கவிப்புயல் சுஹைல் ஆசிரியரின் வாழ்த்து கவி வரிகளுடன் பணி நலன் பாராட்டு விழா ஆரம்பமானது. பாடசாலையின் அதிபர் எம்.ஜீ.எம். சறூகின் வரவேற்புடன் தமிழ் மொழி தின போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளின் பாவோதல் மற்றும் இசையும் அசைவும் நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றன. அத்தோடு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கிய ஆசிரியர் ஏ.பீ.இந்திராணி மெடில்டா பெற்றோர்களின் பாராட்டையும் பெற்றார்.

ப்பலடி அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆசிரியராக இணைந்து அதிபராக பதவி ஏற்று பாடசாலையின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியில் சுமார் 15 வருடங்களாக அரும்பணியாற்றி இடம் மாற்றம் பெற்று சென்ற அதிபர் எம்.எம்.எம். நவ்ப், 14 வருடங்களாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் ஏ டப்யூ.எம் றிஸ்வான் மற்றும் 13 வருடங்களாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் எம்.சீ.எம் நஜாத் ஆகிய மூவரதும் பணி நலனைக் கவி வரிகளால் பாராட்டிய விதம் பலரது பாராட்டையும் பெற்றது. பாடசாலை நிர்வாகத்தினராலும் பெற்றோர்களாலும் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.




# விமானப்படை ஏற்பாடு செய்த ‘Aero Bash’ நிகழ்வு

(அபு அலா )

திருகோணமலை சீனாக்குடா விமானப்படை கல்வி பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எரோ பேஸ் ‘யுநசழ டீயளா’ 2024 இறுதிநாள் நிகழ்வு இன்று (26) சீனாக்குடா விமானப்படை வளாகத்தில் இடம்பெற்றது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘Aero Bash’ 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக் கழகங்கள் தனியார் பல்கலைக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுற்பக் கூடாரங்கள், விமானங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியில் இலங்கை விமான படையின் விமான சாகசங்கள், விமானப்படை பரசூட் வீரர்களின் பரசூட் சாகசங்கள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப் படை மீட்பு குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள், மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்புக் கலை காட்சிகள், விமானப்படை பேண்ட மற்றும் அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள், இரவுநேர இசை நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

Aero Bash’ 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியின் ஆரம்பநாள் நிகழ்வை இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளைக் கண்டு கழிப்பதற்காக இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.






# தியாகி பொன் சிவகுமாரனின் 74 ஆவது பிறந்தநாள் நினைவு

தியாகி பொன் சிவகுமாரனின் 74 ஆவது பிறந்தநாள் நினைவு தினம் உரும்பிராயில் அன்னாரின் சிலை அமைந்துள்ள இடத்தில் இன்று காலை இடம்பெற்றது.

தியாகி பொன் சிவகுமாரின் சகோதரி ஈகை சுடரை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வு தியாகி பொன் சிவகுமார் நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவின் உறுப்பினர் எஸ்.செந்தூரன்தலைமையில் இடம்பெற்றது.







# திருச்செந்தூர் முருகன் ஆலய முதியோர் சங்கத்துக்கு அடிக்கல்!

(பழுவூரான்)

கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய முதியோர் சங்கக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்த இந்தக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் பூஜை வழிபாடுகளுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளரும்இ தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளருமான பிரசன்னா இந்திரகுமாரும்இ சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரத்தினம்இ முன்னாள் சேவா லங்காத் தலைவர் எஸ்.நாகராஜன் மற்றும் கல்லடி முதியோர் இல்லத் தலைவர் சா.அருள்மொழி ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# மட்டு. மரியாள் பேராலயத்தில் இரத்ததானம்!

(பழுவூரான்)

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப் பொருளிலான இரத்ததான முகாம் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலய முன்னரங்கப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது.

இதனை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயம் மற்றும் மட்டக்களப்பு கரித்தாஸ், எகெட் நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தின.

மட்டக்களப்பு கரித்தாஸ், எகெட் நிறுவன இயக்குநர் அருட்பணி நிக்சன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இரத்ததான ஆரம்ப நிகழ்வில், மட்டக்களப்பு கரித்தாஸ், எகெட் நிறுவன உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மட்டக்களப்பு புனித மரியாள் பேராலய மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதி வழங்கினர்.மட்டக்களப்புப் போதனா வைத்திய சாலை இரத்த வங்கி பிரிவு வைத்திய அதிகாரிகளால் விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கு இணங்க இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு வைத்தியர் பி. பிரஷ்ணவி இரத்த வங்கிப் பிரிவு , பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம் . எம் .பைசல் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.







# நண்பேண்டா!

## துரைமுருகன் - ரஜினி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

அமைச்சர் துரைமுருகன் மற்றும் நடிகர் ரஜினிகாந்த் இருவரதும் கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இருவரும் தமது நட்புத் தொடரும் எனக் கூறி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் ரஜினிகாந்த், "பழைய மாணவர்களை சமாளிப்பது சாதாரணமானது இல்லை என்றும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சர்வசாதாரணமாக இதனை செய்கிறார் எனவும் பேசினார். மூத்த அமைச்சர்கள் குறித்து ரஜினிகாந்த் இவ்வாறு பேசியிருந்தார்.

ரஜினிகாந்தின் இந்தப் பேச்சு தொடர்பாக அமைச்சர் துரைமுருகனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்து இருந்த துரைமுருகன்,

"சினிமாவில் மூத்த நடிகர்கள் எல்லாம் வயசாகிப் போய், பல் விழுந்து போய், தாடி வளர்த்து கடைசிக் காலத்திலும் நடித்துக் கொண்டிருப்பதால் இளைஞர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறதா? அப்படித்தான்" என்று கூறினார். அமைச்சர் துரைமுருகனின் இந்தப் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தும் விதமாக இருந்தது.

இந்த நிலையில் இன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த ரஜினிகாந்த், அமைச்சர் துரைமுருகன் கூறியதில் வருத்தம் இல்லை என்றார்.

இது தொடர்பாக ரஜினிகாந்த் கூறுகையில்,

"அமைச்சர் துரைமுருகன் எனது நீண்ட கால நண்பர். அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். துரைமுருகனுடனான எனது நட்பு எப்போதும் போல தொடரும்" என்றார்.

மேலும், தனது கட்சியின் கொடியை அறிமுகப்படுத்திய நடிகர் விஜய்க்கு வாழ்த்தும் தெரிவித்தார்.

இந்நிலையில், தனது பேச்சுக்கு விளக்கம் அளித்துள்ள அமைச்சர் துரைமுருகன்,

"எங்களுடைய நகைச்சுவையை யாரும் பகைச்சுவையாகப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக துரைமுருகன் கூறுகையில்,

"எங்களுடைய நகைச்சுவையை யாரும் பகைச்சுவையாக பயன்படுத்த வேண்டாம், நாங்கள் எப்போதும்போல நண்பர்களாகவே இருப்போம்" என்றார்.

## முதலீடுகளை அள்ளி வர தமிழ்நாடு முதல்வர் நாளை

# அமெரிக்கா பயணம்



தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை இரவு அமெரிக்கா செல்லவுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2030ஆம் ஆண்டுக்குள் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கிய பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்திடும் நோக்கிலும் செயல்பட்டு வருகிறார்.

இதற்காக அவர் முதலீட்டாளர்களைச் சந்தித்து தமிழ்நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்து வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொழில் முதலீடுகளை ஈர்க்க நாளை இரவு அமெரிக்கா செலலவுள்ளார்.

சென்னை விமான நிலையத்திலிருந்து நாளை இரவு 10 மணியளவில் அமெரிக்கா நோக்கிப் பயணத்தை ஆரம்பித்து 28ஆம் திகதி சன்பிரான்சிஸ்கோ நகரை சென்றடைவார்.

அங்கு அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வரவேற்பார்கள்.

இதைத் தொடர்ந்து 29ஆம் திகதி சன்பிரான்சிஸ் கோவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் பங்கேற்று தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுப்பார்.

அதைத் தொடர்ந்து 31ஆம் திகதி புலம்பெயர்ந்த இந்தியர்களுடனான சந்திப்பில் முதலமைச்சர் பங்கேற்றுப் பேசுவார். சிக்காக்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்களையும் சந்தித்துப் பேசுவதற்கும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமெரிக்காவில் பல்வேறு நாட்டு தொழிலதிபர்கள் மற்றும் முதலீட்டாளர்களை சுமார் 30 இடங்களுக்குச் சென்று முதலமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்காவின் முன்னணி 500 நிறுவனங்களின் அதிகாரிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கப் பயணத்தை நிறைவு செய்து அடுத்த மாதம் 14ஆம் திகதி (செப்டம்பர்) சென்னை திரும்புவார் எனத் தெரிகிறது.

# “உங்கள் மதம் என்ன?”

## மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வைத்து தம்மிடம் கேட்கப்பட்டது என நமீதா குற்றச்சாட்டு

“மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் என்னிடம் உங்களுடைய மதம் என்ன, எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று கேட்டனர்” என நமீதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பா.ஜ.க. உறுப்பினரும் நடிகையுமான நடிகை நமீதா, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குத் தரிசனம் செய்யச் சென்றிருந்தார்.

அப்போது அதிகாரி ஒருவர் அவரிடம் உங்களுடைய மதம் என்ன, எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று கேள்வி எழுப்பினார் என நமீதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில்,

“மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குத் தரிசனம் செய்யச் சென்றிருந்தேன். அப்போது பெண் அதிகாரி ஒருவர், என்னிடம் உங்களுடைய மதம் என்ன, எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று கேட்டார். கோவில் நிர்வாகத்தினர் என்னிடம் இந்து என்பதற்கான சான்றிதழ் கேட்டனர்.




நான் இந்து மதத்தைச் சேர்ந்தவள். என் திருமணம் திருப்பதியில் நடந்தது. என் குழந்தைக்குக் கூட கிருஷ்ணரின் பெயர் தான் வைத்துள்ளேன். கோவில்களில் இதுபோன்ற நடவடிக்கைகள் நடப்பது வருத்தமாக உள்ளது.

இந்தியாவில் எந்தக் கோவிலிலும் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டதில்லை.

மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகத்தினர் என்னிடம் கடுமையாக நடந்து கொண்டனர். அமைச்சர் சேகர்பாபுவிடம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைதத்துள்ளேன்” என்று தெரிவித்துள்ளார்.



பலுசிஸ்தான் - பஞ்சாப் நெடுஞ்சாலையில் நடந்த

# கொடூரம்!

**23 பயணிகள் சுட்டு படுகொலை!**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் - பஞ்சாப் நெடுஞ்சாலையில் பயணிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பலுசிஸ்தான் - பஞ்சாப் நெடுஞ்சாலையில் வைத்து பஸ்களைத் தடுத்து நிறுத்திய பயங்கரவாதிகள், பயணிகளைக் கீழே இறக்கிவிட்டு அவர்களின் அடையாளங்களைப் பரிசோதித்தனர். பின்னர் ஒரு சாராரைத் தனிமைப்படுத்தி அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் 23 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பலுசிஸ்தானின் முசாகெல் மாவட்டத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், உடல்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர்கள் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டது. மேலும் பயங்கரவாதிகள் 10 வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

இந்த கொடூர சம்பவத்துக்கு பலுசிஸ்தான் முதல்வர் சர்பராஸ் புக்டி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே இதுபோன்ற சம்பவங்கள் பலதடவைகள் பலுசிஸ்தான் - பஞ்சாப் நெடுஞ்சாலையில் நடந்திருக்கின்றன. பலுசிஸ்தான் பிரிவினைவாதிகள் பஷ்துன் இனத்தவரை இவ்வாறு படுகொலை செய்வது பாகிஸ்தான் அரசுக்கு நீண்டகால சவாலாகவே இருந்து வருகிறது.

இந்நிலையில் இன்றைய சம்பவமும் இதே பாணியில் பலுச் இனத்தவரை விட்டுவிட்டு பஷ்துன் இனத்தவரை மட்டும் கண்டுபிடித்து நடத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.




ரஷ்யா - உக்ரைன் சரமாரி

# ‘ட்ரோன்’ தாக்குதல்

ரஷியாவின் சராதோவ் பகுதியில் உக்ரைன் ட்ரோன்களை ஏவி சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த டிரோன்கள் வானிலேயே தகர்க்கப்பட்டமையால் அவற்றின் பாகங்கள் சராதோவ் பகுதியில் உள்ள குடியிருப்புக் கட்டடங்களின் மீது விழுந்து நொறுங்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

ரஷியா - உக்ரைன் போர் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் நிலையில், சமீபத்தில் உக்ரைன் படைகள் ரஷ்யப் பகுதிகளுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தின. ரஷ்யாவின் கவுர்க்ஸ் உள்ளிட்ட பிராந்தியங்களை உக்ரைன் படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

இந்நிலையில், இன்று அதிகாலை, 2 கட்டங்களாக உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்ய இராணுவம் ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்த டிரோன்களை தங்களின் இராணுவம் தாக்கி அழித்தது என உக்ரைன் தெரிவித்திருந்தது.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ரஷ்யாவின் சராதோவ் பகுதிக்குள் உக்ரைன் தனது ட்ரோன்களை ஏவி சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரைனின் 20 ட்ரோன்களைத் தாம் தாக்கி அழித்துள்ளனர் என ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால், வானிலேயே தகர்க்கப்பட்ட ட்ரோன்களின் பாகங்கள் சராதோவ் பகுதியில் உள்ள 38 மாடிக் குடியிருப்புக் கட்டடத்தின் மீது விழும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். இதற்கிடையில் சராதோவ் பகுதியில் விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் சராதோவ் சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

கனடா முரசு

பக்கங்கள் 09

திங்கட்கிழமை | 26/08/2024

## கனடாவில் கொலை செய்து விட்டுத் தப்பிய கனடா இளைஞர் பிரிட்டனில் மாட்டினார்!

கனடாவில் ஒருவரைக் கொலை செய்துவிட்டு தப்பியோடிய கனேடியர் ஒருவர் பிரித்தானியாவில் சிக்கினார்.

கடந்த மே மாதத்தில், கனடாவின் ரொரன்றோவில், C5





# கனடா தமிழர் தெருவிழா இழுபறிகளோடு முடிந்தது

கனடிய தமிழர் பேரவை நடத்திய இரண்டு நாள் தமிழர் தெருவிழா வழமைக்கு மாறாக இம்முறை பெரும் நெருக்கடிகள், களேபரங்கள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்றும் முன்தினமும் ஒருவாறு ஒப்பேறி முடிந்திருக் கிறது.

கனடியத் தமிழர் பேரவை வருடந்தோறும் தமிழர் தெருவிழா எனும் நிகழ்வினை நடத்திவருகின்றது. பத்தாவது வருடமாக இந்த மாதம் 24,25 திகதிகளில்(சனியும் ஞாயிறும்) இந்த விழா நடத்தப்படும் என தெரிவிக்கப் பட்டிருந்தது.

கனடாவில் அதிக அளவில் தமிழ் மக்கள் ஒன்றுகூடுகின்ற நிகழ்வு இதுவாகும். 02










# கனடா தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடம் கனடிய தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ் மக்கள் இந்த விழாவைப் புறக்கணிக்க வேண்டும் என கனடாவில் உள்ள சில தமிழ் அமைப்புகளும், சில செயற்பாட்டாளர்களும் கனடாத் தமிழ் மக்களைக் கோரியிருந்தனர்.

அத்துடன் இந்த நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்ககூடாது என வர்த்தகர்களிடமும் கோரிக்கை அழுத்தமாக முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்சிக்கு அனுசரணை வழங்கி இருந்த பிரதான அனுசரணையாளர்கள் நிகழ்சிக்கு முதல் நாள் தமது அனுசரணையை விலக்கிக் கொண்டிருந்தனர்.

புறக்கணிக்க கோரி கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட நிலையில் - பல கலைஞர்கள், வர்த்தகர்கள் விலகிகொண்ட சூழ்நிலையில் - பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கு கொள்ளமாட்டார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

நிகழ்வுக்கு எதிராகப் புலிக் கொடிகளோடு வீதிகளில் தீவிர பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதுடன், நிகழ்ச்சி நடைபெறும் வீதிகளின் தொடக்கத்தில் இருந்தும் போராட்டம் செய்யப்பட்டது.

எனினும் எதிர்ப்புகளை மீறி சனிக்கிழமையன்று நிகழ்ச்சி நடைபெற்றமையுடன் பொதுமக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் இடையில் தென்னிந்தியப் பின்னணிப் பாடகர் ஸ்ரீனிவாஸ் பாடிகொண்டிருந்த போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தரப்பில் இருந்து மேடை மீது முட்டை வீசப்பட்டது. இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் நிகழ்ச்சி இடை நிறுத்தபட்டது.

தமிழர் தெருவிழாவின் இரண்டாம் நாள் நேற்று ஒரு சில நிகழ்சிகளுடன் நிறைவடைந்தது.

கனடிய தமிழர் பேரவையின் எதிர்பாளர்களின் போராட்டத்துக்கு மத்தியில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.















# கனடா தமிழர் தெருவிழாவில் அடாவடித்தனம், அட்டகாசம்!

கனடிய தமிழர் பேரவை நடத்திய இரண்டு நாள் தமிழர் தெருவிழாவிக் தமிழ் one tv வாகனம் எரியூட்டப்பட்டது

கனடாவின் பிரதான தமிழ் ஊடகங்களில் ஒன்றான தமிழ் one tv நேற்றுத் தாக்கப்பட்டிருக்கின்றது.

SV media குழுமத்தின் தமிழ் தொலைக் காட்சியான தமிழ் one தொலைக்காட்சியின் ஒளிபரப்பு வாகனம் தமிழர் தெருவிழாவுக்கு சேவை வழங்குவதற்காகத் தரித்திருந்த சமயம் இனம் தெரியாத நபர்களினால் நேற்றுக் காலை எரியூட்டப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதான தமிழ் மக்களின் விழாவான Tamil Fest எனும் தமிழர் தெருவிழாவுக்கான எதிர்ப்பின் வெளிப்பாடாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக தெரிவருவதாவது:-

கனடா தமிழர் தெருவிழாவிற்கு எதிர்ப்புக் காட்டி வந்த தரப்பினரால் தமிழ் one தொலைக்காட்சியின் பிரதான நிறுவனமான SV Media விடமும் இந்த நிகழ்ச்சியின் மேடை,ஒளி,ஒலி தயாரிப்புப் பணிகளில் இருந்து விலகிக்கொள்ளுமாறு கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனினும் தாம் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து பொறுப்பேற்ற சேவையில் இருந்து தாம் விலக முடியாது என SV Media வின் சார்பில் தெரிவிக்கப்பட்டதுடன் நிகழ்ச்சிக்கான தயாரிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக SV Media வின் தொலைகாட்சியான தமிழ் one tv யின் ஒளிபரப்பு வாகனம் பெறுமதி மிக்க ஒளிபரப்புக் கருவிகளுடன் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கனடா தமிழர் தெருவிழாவில் அடாவடித்தனம், அட்டகாசம்!












# கனடிய வருமான முகவர் நிறுவனம் தன் சேவை நேரத்தை நீடிக்கின்றது

கனடாவின் வருமான முகவர் நிறுவனம் ஒன்று வரி செலுத்தும் கனடியர்களுக்கு கூடுதல் சேவையை வழங்கும் நோக்கில் கூடுதல் நேரம் சேவையை வழங்க தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விசேட அறிவிப்பு ஒன்றை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கனடிய வருமான முகவர் நிறுவனத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள விரும்புவார்களின் நலன் கருதி இவ்வாறு சேவை நேரத்தை நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

வரி செலுத்துபவர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த சேவை நேர நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான பணி நேரத்தை விடவும் கூடுதல் அளவு நேரம் சேவை வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நேர வலய மாற்றங்களினால் சில வாடிக்கையாளர்களினால் வருமான முகவர் நிறுவனத்தை தொடர்பு கொள்ள முடியாது உள்ளதாகச் சுட்டப்படுகிறது.

ஒருவர் ஒரு நகரில் இருந்து மற்றுமொரு நகருக்கு குடிபெயரும் போது அந்த புதிய நேர வலயத்தின் ஊடாக வருமான முகவர் நிறுவனத்தை தொடர்பு கொள்வதில் இடர்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

இந்த அசௌகரியத்தை தடுக்கும் நோக்கில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 6:30 மணி முதல் இரவு 11 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை ஏழு முப்பது மணி முதல் இரவு 8 மணி வரையிலும் சேவை வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நேர மாற்றத்தின் ஊடாக கனடாவின் அனைத்து பிராந்தியங்களில் வாழும் வாடிக்கையாளர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்பட முடியும் என வருமான முகவர் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்ரி யன் கோர்டன் (வயது24) என் பவர், 'பொடிபில்டரான' ஜெஸி டப்ஸ் (வயது30) என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தலைமறைவானார்.

ஜெஸி மருத்துவமனையில் உயிரிழக்க, அட்ரியனைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வந்தனர். அவர் வெளிநாடொன் றிற்குத் தப்பியிருக்கலாம் எனத் தெரியவந்ததைத் தொடர்ந்து, சர்வதேச அளவில் தேடுதல் வேட்டை துவங்கியது.

இந்நிலையில், இங்கிலாந்தி லுள்ள லூட்டன் என்னுமிடத்தில் அட்ரியன் பதுங்கியிருக்கின்றார் என்ற தகவல் கிடைக்கவே, கனடாப் பொலிஸார் பிரித்தானிய பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

அதன்படி, அதிரடியாக அட்ரியன் தங்கியிருந்த வீட்டுக்குள் நுழைந்த பிரித்தானியப் பொலி ஸார் அவரைக் கைது செய்துள் ளனர்.

தங்கள் வீட்டுக்கருகே வாழ்ந்து வந்தவர், கொலைக் குற்றம் செய்துவிட்டு தலை மறை வாக வாழ்ந்துவந்தவர் என தெரியவந்ததால், அந்த குடியிருப்பில் வாழ்பவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளார்கள்.

அட்ரியனைக் கனடாவுக்குக் கொண்டு வருவதற்கான நடை முறைகள் துவக்கப்பட்டுள்ளன.





# கனடாவில் பாலம் ஒன்றில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவரைக் காணவில்லை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பாலம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

வர்த்தக சேவையில் ஈடுபடும் ட்ரக் ஒன்று பாலத்தை உடைத்துக் கொண்டு நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கியாமோஸ் பகுதியில் அமைந்துள்ள RW Bruhn என்ற பாலத்தில் நேற்று முன்தினம் காலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


ட்ரக் பாலத்திலிருந்து சுமார் 60 அடி ஆழமான தண்ணீருக்குள் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வாகனத்தில் சாரதி மட்டும் பயணத்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. விபத்தில் சிக்கிய சாரதியும் ட்ரக்கும் நேற்று வரைக் கண்டுபிடிக்கப்படவில்லை.

தீயணைப்பு படையினர், மீட்பு பணியாளர்கள், பொலிஸார் உள்ளிட்ட பலரும் சாரதியை மீட்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தினால் பாலத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து காரணமாக பாலத்தின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.









# அமெ., கனடாவிற்கு நுழைய இனிமேல் பிரேசிலைப் பயன்படுத்த இடமில்லை!

## விதிகளை இறுக்குகின்றது அந்த நாடு

சாவ் பாலோ,ஓக.26


ஆசியாவில் இருந்து வந்த சில வெளிநாட்டு குடிமக்கள் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் குடிபெயர்வதற்கான வழிமுறையாக தென் அமெரிக்க தேசமான பிரேசிலைப் பயன்படுத்துவதற்கு எதிராக அந்நாடு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கும் என்ற அந்நாட்டின் நீதி அமைச்சகத்தின் செய்தி அலுவலகம் கடந்த வாரம் தெரிவித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடங்கும் இந்த நடவடிக்கை, பிரேசிலில் தங்குவதற்கு விசா தேவைப்படும் ஆசிய புலம்பெயர்ந்தோரைப். பாதிக்கும்.

அசோசியேட்டட் பிரஸ்ஸுக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ ஆவணங்களின்படி, இந்த புலம்பெயர்ந்தோர் மற்ற இடங்களுக்கு செல்லும் வழியில், சாவ் பாலோவின் சர்வதேச விமான நிலையத்தில் தங்கும் விமானச் சீட்டுகளை அடிக்கடி வாங்குகிறார்கள், ஆனால் பிரேசிலில் தங்கியிருந்து வடக்கே தங்கள் பயணத்தைத் தொடங்குகிறார்கள் என்று மத்திய காவல்துறை விசாரணை வெளிப்படுத்துகிறது எனக் கூறப்பட்டது.

விமான நிலையத்தில் தஞ்சம் அடைவதற்கான கோரிக்கைகளில் எழுபது வீதத்திற்கும் அதிகமானவை இந்திய, நேபாள அல்லது வியட்நாமிய நாட்டினரிடமிருந்து வந்தவை என்று ஆவணங்களில் ஒன்று கூறுகிறது.

அடுத்த வாரம் முதல், விசா இல்லாத பயணிகள் விமானம் மூலம் தங்கள் பயணத்தைத் தொடர வேண்டும் அல்லது அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.




# கனடாவில் இரு சம்பவங்களில் துப்பாக்கிச் சூட்டில் ஐவர் காயம்

கனடாவில் இடம் பெற்ற இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

ஹமில்டன் பகுதியில் பார்டென் வீதியின் அமைந்துள்ள பெடல்ஸ் விருந்தகத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 20 மற்றும் 28 வயதான இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

காயங்கள் உயிராபத்தானவை கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

மதுபான கடைக்கு சொந்தமான வாகன திரைப்படத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திட்டமிட்ட அடிப்படையிலான துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இதனைக் கருத முடியும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, போவன் வீதியின் களியாட்ட விடுதி ஒன்றியத்திக் மற்றும் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை கருப்பின சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

அண்மைய நாள்களாக களியாட்ட விடுதிகள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்களில் இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# வாடகைக் குடியிருப்பாளர்களின் தரவுகள் களவாடப்பட்டிருக்கலாம் என எச்சரிக்கை

கனடாவில் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கு, மேற்கு கனடாவைச் சேர்ந்த முன்னணி வீட்டுமனை நிறுவனங்களில் ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாடகைக் குடியிருப்பாளர்களின் தரவுகள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்படுவதாகவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மெயின் ஸ்ட்ரீட் ஈக்விட்டி கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. தமது நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பிற்குள் மூன்றாம் தரப்பினர் உட்பிரவேசித்து உள்ளதனை கண்டறிந்து கொண்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

உடனடியாக இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அது தெரிவித்துள்ளது.

சில வேளைகளில் வாடகைக் குடியிருப்பாளர்களின் தரவுகள் களவாடப்பட்டு இருக்கலாம் என அந்த நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது. தெரிவிக்கப்படுகிறது.

மெயின் ஸ்ட்ரீட் நிறுவனம் சுமார் 17 ஆயிரம் குடியிருப்புத் தொகுதிகளை நிர்வாகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கனடாவிற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை 4 ஆண்டுகளாக அதிகரிப்பு

கனடாவிற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

எவ்வாறு எனினும் கொவிட் 19 பெருந்தொற்றுக் காலப்பகுதிக்கு முன்னர் கனடாவிற்கு வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கையின் அளவை விடவும் குறைவான எண்ணிக்கையே இது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் கனடாவில் வதியாத 3.6 மில்லியன் பேர் கனடாவுக்கு வருகை தந்துள்ளனர்.

இது கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 6.3 வீத வீழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

பெருந்தொற்றுக்கு முன்னரான கோடை காலப்பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான பயணிகள் கனடாவிற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அமெரிக்கா தவிர்ந்த வேறும் நாட்டு பிரஜைகளின் வருகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

எவ்வாறெனினும், கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் முதல் ஆறு மாத காலப் பகுதியில் சுமார் 259,000 பேர் அதிக அளவில் கனடாவிற்கு விஜயம் செய்துள்ளனர்.

அமெரிக்காவை தொடர்ந்து கனடாவிற்கு விஜயம் செய்யும் ஏனைய நாட்டுப் பிரஜைகளாக பிரித்தானியா, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் முன்னிலை வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# டொமினிக் குடியரசில் நிர்க்கதியாகத் தவித்த கனேடியப் பெண்ணும் அவரது குடும்பத்தவரும்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரது குடும்பத்தவரும் டொமினிக் குடியரசில் நிர்க்கதியாக்கப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ப்ளையர் எயார்லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனத்தின் ஊடாக பயணம் செய்த பெண் ஒருவரே இவ்வாறு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளார்.

ரொறன்டோவிற்கு திரும்பவிருந்த இந்த ப்ளையர் எயார்லைன்ஸ் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் சீரற்ற கால நிலை காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இதனால் தாம் நிர்க்கதியாக நேரிட்டதாக அந்தப் பெண் குற்றம் சுமத்தியுள்ளார்.

டேனி திரின்கா என்ற பெண்ணே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். திரின்கா மற்றும் அவரது கணவர் மற்றும் அவரது மகள் ஆகியோர் டொமினிக் குடியரசின் Punta Cana என்னும் பகுதிக்கு சுற்றுலா சென்றிருந்தனர்.

பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததனை முன்னிட்டு இந்த சுற்றுலா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இது ஏழு நாள் சுற்றுலா பயணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாடு திரும்புவதற்கு திட்டமிட்டு இருந்தபோது விமானப் பயணம் ரத்து செய்யப்பட்டதாவும் இதனால் தாங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டு தவிக்க நேரிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ரொறன்டோ பியர்சன் விமான நிலையத்தில் நிலவிய புயல் காற்று நிலைமையினால் இந்த விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பெண் பிளயர் விமான சேவையின் விமான பணிப்பெண்ணாக கடமை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விமானம் ரத்து செய்யப்பட்டதன் பின்னர் சில நாள்களின் பின்னரே அடுத்த விமான சேவை சேவையில் ஈடுபடுத்தப்படும் என கூறப்பட்டதாகவும் இதனால் அவர்கள் வேறும் விமானங்களைப் பயன்படுத்தி நாடு திரும்பினர் எனவும் மூன்று நாள்கள் மேலதிகமாக தங்கியிருந்தமைக்கான மேலதிக செலவுகளை விமான சேவை நிறுவனம் ஏற்க மறுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தான் கடமையாற்றிய காலத்தில் விமான சேவை நிறுவனம் தொடர்பில் தாம் பெருமிதத்துடன் இருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் விமான சேவை நிறுவனம் வாடிக்கையாளர்களை உரிய முறையில் கவனிக்க தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பயணிகளின் விமான பயணங்கள் ரத்து செய்யப்பட்டு மீள் பதிவு செய்வது ஒரு சிரமமான செயல்முறை என ப்ளையர் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.